gistered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 26 புதன்கிழமை (10.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :164

# நிலைமை சீராகும் வரை பேச்சுச் சாத்தியமில்லை!

## அகாஷியைச் சந்தித்துப் பேசிய பின் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 10

தமிழர் தாயக நிலப்பரப்பில் நிலைமைகள் சீராகும் வரை சமாதானப் பேச்சுக்குச் செல்வது சாத்தியமில்லை. புலிகள் எப்போதும் பேச்சுக்குத் தயாராகவே இருக்கின்றனர்.



ஆனால் பேச்சுக்கு எம்மைச் செல்லவிடாமல் தடைகளை ஏற்படுத்தியது அரசுதான். கடந்த 4 ஆண்டுகாலமாக நடைமுறையில் இருந்த போக்குவரத்து ஒழுங்குகளை முடக்கி அரசுதான் நெருக்கடியை ஏற்படுத்தியது. அதே சமயத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் மக்கள் படுகொலைகளும் தொடர்கின்றன. இத்தகைய ஒரு நிலைமையில் விடுதலைப் புலிகள் ஜெனீவாப் பேச்சுக்குச் செல்ல முடியாது.

-இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி மற்றும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஆகியோர் அடங்கிய குழுவினர் கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசினர்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்ச் செல்வனுடன் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

### பிரபாகரனிடம் இருந்து அரசுக்கு முக்கிய செய்தி!

#### அகாஷி எடுத்துச் சென்றார்

கிளிநொச்சி, மே 10

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்குள் சமாதான முன்முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அரசுக்கு விசேட செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். நேற்று கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசிய, ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் இந்தச் செய்தி கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் சந்திப்பு முடிந்த பின்னர் அகாஷியே இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலக இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அரசியல்துறைப் பொறுப்பாளரால் தெரிவிக்கப்பட்ட (08ஆம் பக்கம் பார்க்க)

## அரச பயங்கரவாதத்துக்கு கடும் எதிர்ப்பு

# நாடாளுமன்றத்துக்கு முன்னால் கூட்டமைப்பினர் குந்துமறியல்

## 'உதயன்' தாக்குதலுக்கும் கண்டன குரல்

கொழும்பு, மே 10

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் ஊடகங்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபை அமர்வுகளைப் பகிஷ்கரித்து, நாடாளுமன்ற பிரதான நுழைவாயில் மேடையில் அமர்ந்திருந்து சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தினர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறையில் இரு வர்த்தகர் கடத்தல்

பருத்தித்துறை நகரப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோரால் இரு வர்த்தகர்கள் கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சிகையலங்கார நிலையத்தின் உரிமையாளரான கோபி என்பவர் அவரது நிலையத்தைப் பூட்டிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டசமயம் கடத்தப்பட்டார். மற்றொரு வர்த்தகரும் அதேநேரம் கடத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

### இணுவிலில் நேற்றிரவு கிரனேட் தாக்குதல்

யாழ்ப்பாணம்,மே10

இணுவில் கந்தசுவாமி கோயில் சந்தியில் நேற்று இரவு 7.30 மணியளவில் படையினர் மீது கிரனேட் வீசப்பட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை - திருநெல்வேலி வங்கிக்கு அருகில் பணியில் இருந்த படையினரை நோக்கி கிரனேட் வீசப்பட்டது. அது வெடிக்காததால் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

# பணிப்புறக்கணிப்புப் போர் குடாநாட்டில் தொடர்கிறது!

## பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், மே10

யாழ். குடாநாட்டில் படையினரின் அத்துமீறல்கள், அட்டூழியங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது. அரச நிர்வாகத்தை முடக்கும் வகையிலான இந்தப் போராட்டத்தால் மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நான்காவது நாளாக நேற்று நீடித்தமையால் அரச நிர்வாகங்களில் தங்கள் கருமங்களை ஆற்றமுடியாமல் மக்கள் பெரும் துன்பமடைந்தனர். பாடசாலைகள் இயங்கவில்லை. வங்கிகள், அரச அலுவலகங்கள், திணைக்களங்கள், நீதிமன்றங்கள் என்பன மூடிக்கிடந்தன. அரச உயர் அதிகாரிகளையும் அலுவலகங்களில் காணவில்லை என்று எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக பஸ் சேவைகளும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தனியார் மினிபஸ் சேவைகள் ஓரளவிற்கு இடம்பெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் நேற்றுமுன்தினம் மாலை வரை மாவட்டம் முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததால் வெளியே நடமாட முடியாது தவித்த மக்கள், நேற்றுக் காலை முதல் கடைகளில் பொருள் களை வாங்கிச் சேர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண் எண்ணெய்க்கு பொதுமக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

வீதிகளில் ஓரளவிற்கு சன நடமாட்டம் காணப்பட்டபோதும், பெரும்பாலும் நகரமும் மற்றைய இடங்களும் வெறிச்சோடி...

(08ஆம் பக்கம் பார்க்க)

# பனிக்கன்குளத்தில் இருவரின் சடலங்கள் நேற்று மீட்பு!

## ஆழ ஊடுருவல் அணியின் தாக்குதலில் பலியானவர்கள்

கிளிநொச்சி,மே10

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பனிக்கன் குளம் காட்டுப் பகுதியிலிருந்து, காணாமற்போன வனவளப் பாதுகாப்புக் குழுவின் இரு பணியாளர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 2ஆம் திகதிமுதல் காணாமற்போன வனவளப்பாதுகாப்புக் குழுவின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கிழக்குப் பகுதியில் மீன்பிடிக்கத் தடை விதிப்பு

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே10

காரைநகர் கிழக்குப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு கடற்படையினர் தடைவிதித்துள்ளதால் இருநூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி காரைநகர் கடற்பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுவிட்டு கரைக்குத்திரும்பிய மீனவர்கள் பலரை கடலில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகக் கூறி கடற்படையினர் தாக்கினர் என்றும் -

அதன்பின்னர் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும்- காரைநகர் கடற்றொழிலாளர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுச் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (86)

# விக்கி கொலைச் சந்தேகநபர் கொழும்பில் நேற்று விடுவிப்பு

கொழும்பு, மே 10

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்வத்தின்போது கைதுசெய்யப்பட்ட திருகோணமலை இலங்கை வங்கிக் கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தரை விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் பணிப்பின் பேரில் திருமலை சென்ற குற்றப் புலனாய்வுப் பொலீஸார் ஏப்ரல் ஒன்பதாம் திகதி மேற்படி பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கைது செய்திருந்தனர்.

இதனையடுத்து குற்றப் புலனாய்வுப் பொலீஸார் சமர்ப்பித்த அறிக்கையொன்றை நேற்றுப்பார்வையிட்ட கொழும்பு பிரதம நீதிவான், மேற்படி உத்தியோகத்தரை விடுதலை செய்ததுடன், தேவைப்படின் அவர் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமெனவும் பணித்தார்.

# துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைய ஜெனீவாவில் அரசு இணங்கவேயில்லையாம்!

## தொப்பிபிரட்டுகிறார் வீரவன்ஸ!

கொழும்பு,மே10

அரசுடன் சேர்ந்தியங்கும் துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைவதற்கு ஜெனீவாப் பேச்சில் அரசு உடன்படவில்லை. ஜெனீவாப் பேச்சின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

ஆனால், புலிகள் அரசு வாக்குறுதியளித்ததும் துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென க் கூறிக்கொண்டு நான்காவது கட்ட ஈழ போரைத் தொடங்கியிருக்கின்றனர். இப்போரை முறியடிக்க, இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும்.

- இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையில் ஜெனீவாவில் இடம்பெற்ற அமைதிப்பேச்சின்போது, அரச படையினருடன் சேர்ந்தியங்கும் துணைப்படையினரின் ஆயுதங்களைக் களைய அரசு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு உறுதியளித்துள்ளதாகப் புலிகள் கூறுகின்றனர்.

அவ்வாறு துணைப்படையினரின் ஆயுதங்களைக் களையப் போவதாக அரசு ஒருபோதும் வாக்குறுதியளிக்கவில்லை. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசபடையினர் மற்றும் பொலீஸார் ஆகியோரைத் தவிர வேறு எவரும் ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அவ்வாறு சட்ட விரோதமான முறையில் வைத்திருக்கப்படும் ஆயுதங்களே களையப்படும் எனவும் அரசு வாக்குறுதியளித்தது. கூட்டறிக்கையில் இதுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், புலிகள் இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைவதாகவே அரசு வாக்குறுதியளித்தது எனக் கூறுகின்றனர். இதை அடிப்படையாகக் கொண்டே புலிகள் நான்காம் ஈழப்போரைத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையை 'மற்றுமொரு சூடானாக மாற்றும் ஓர் அடிப்படையின்கீழ்தான் புலிகள் செயற்படுகின்றனர். இலங்கையை யுத்தத்தில் தள்ளி சர்வதேச சமூகத்திடம் மண்டியிட வைப்பதே புலிகளின் திட்டம். பேச்சில் சிறிதளவேனும் அக்கறையின்றி யுத்தத்தை தொடங்கியுள்ள புலிகள் அவர்களின் யுத்தம் வெற்றியடையவிடக்கூடாது. தேசத்தின் நலன்கருதித் தேசத்தை அழிக்கும் புலிகளின் சதித்திட்டத்தை முறியடிக்க இந்நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, பேதம் இன்றி ஒன்றிணைய வேண் டும்.

எமது தேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இது. இதைத் தவறவிட்டால் எமது தேசம் மிஞ்சாது. ஆகவே, அனைவரும் ஒன்றிணைந்து புலிகளைத் தோற்கடிக்க வேண்டும்.

புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் சிக்கிக் காயமடைந்திருக்கும் இராணுவத்தளபதி சரத் பொன் சேகா விரைவில் குணமடைய வேண்டும். அவர் தொடர்ந்து புலிகளை அடக்கப் போராட வேண் டும். அதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைக்க வேண்டும்.

புலிகள் என்னதான் சதித்திட் டங்களைத் தீட்டினாலும் அது வெற்றியடைய நாம் விடமாட் டோம் - என்றார் வீரவன்ஸ. (க)

# அவசரகாலச் சட்ட நீடிப்பு ஆரவாரமின்றி நிறைவேற்றம்!

கொழும்பு,மே10

அவசரகாலச் சட்டம் நேற்று நாடாளுமன்றில் வாக்கெடுப்பின்றி சபையோரின் இணக்கப்பாட்டோடு மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் தலைமையில் கூடிய போது மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை சபையில் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்திருந்ததால் விவாதமின்றி பிரேரணையை நிறைவேற்ற அரச தரப்பினர் சபையின் இணக்கத்தைக் கோரினார்.

விவாதம் நடத்தவேண்டும் என எதிர்க்கட்சியினர் கேட்டுக்கொண்டனர். இதனால் விவாதம் இடம்பெற்றது.

விவாத முடிவில் பிற்பகல் 3.30 மணியளவில் அவசரகாலச் சட்டப்பிரேரணை சபையோரின் இணக்கப்பாட்டோடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு மீண்டும் கூடுகிறது. (க)

# நிலைமை சீராகும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின் இறுதியில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச் செல்வன் கூறியதாவது:-

தமிழர் தாயகத்தில் இனப்படுகொலைகளை மேற்கொண்டு வன்முறைச் சூழலை உருவாக்கி ஒரு யுத்த நிலையை மக்கள் மீது திணிக்கும் ஸ்ரீ லங்கா அரசு, மறுபுறத்தில் பேச்சுக்குத் தாம் தயாராக இருக்கின்றது என்று போலித்தனமான அறிவிப்புக்களை வெளியிட்டு வருகிறது. மஹிந்த ராஜபக்ஷ அரசின் இத்தகைய இரட்டை வேடத்தை, இன்று எம்மைச் சந்தித்த ஜப்பானிய சிறப்புத் தூதுவர் அகாசி மற்றும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஆகியோர் அடங்கிய குழுவினரிடம் விளக்கினோம்.

ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் 148க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நாளாந்தம் எமது மக்கள் கொல்லப்படுகின்றனர். நாளாந்தம் பலர் காணாமல் போகின்றனர். பொதுமக்களை இலக்கு வைத்து அரசாங்கம் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளதை ஜப்பானியக் குழுவினரிடம் விரிவாகப் புள்ளிவிவரங்களுடன் விளக்கினோம். பேச்சுக்களுக்கு நாங்கள் செல்வதற்கு சிறிலங்கா அரசு விதித்த முட்டுக்கட்டைகள், இடையூறுகள் என்பவற்றையும் எடுத்து விளக்கினோம்.

எங்களது தலைமைப்பீடம் மத்தியக் குழுக் கூட்டத்தைக் கூட்டமுடியாத வகையில எமது கிழக்குப் பிரதேசப் போராளிகள், தளபதிகளின் போக்குவரத்தை அரசு முடக்கியதையும், தொடர்ச்சியாகப் பொதுமக்களைப் படுகொலை செய்து வன்முறைச் சூழலை அது உருவாக்கியிருப்பதையும் சுட்டிக்காட்டிய நாம் பேச்சுக்கான உகந்த சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசின் கைகளில்தான் உள்ளது என்பதையும் ஜப்பானியக் குழுவினரிடம் கூறினோம். எமது மக்கள் மீது முழு அளவிலான யுத்தத்தைத் திணிக்க அரச தரப்பு அனைத்து விதமான முன்னெடுப்புகளையும் மேற்கொண்டுள்ளதையும் அவர்களுக்குத் தெரிவித்துள்ளோம்.

அரசிடமிருந்து எமக்கு எதுவித செய்தியையும் ஜப்பானிய குழு கொண்டுவரவில்லை.

### அரசின் திட்டமிட்ட செயல்

பொதுமக்களின் போக்குவரத்துக்கான பாதைகளை மூடி, மக்களைப் படுகொலை செய்வது அரச தரப்பால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நடவடிக்கை. அதற்கு மாறாகப் பொதுமக்களின் போராட்டங்களை மக்கள் கைவிடுவதற்காக விடுதலைப் புலிகள் உறுதியளிக்க வேண்டும் என்பது போன்ற பொருத்தமற்ற காரணங்களை அரசாங்கம் கூறிக் கொண்டிருப்பது நியாயமற்றது.

பொதுமக்கள் மீது வன்முறைகளையும் படுகொலையையும் திணிக்கின்றபோது அவர்கள் கோபாவேசத்துடன் பதில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. இதற்காக விடுதலைப் புலிகளிடம் வாக்குறுதி கேட்பதும், பழி சுமத்துவதும் எந்த விதத்திலுமே பொருத்தமற்றது. இதைத்தான் இன்றைய சந்திப்பிலும் நாம் சுட்டிக் காட்டினோம்.



### இராணுவ வன்முறைகள் ஒருவித யுத்தச் சூழலே

உடனடியாக இராணுவ வன்முறைகளை நிறுத்தி - பொதுமக்களினது இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கிற இராணுவச் செயற்பாடுகளை நிறுத்தி - பொதுமக்களின் வாழ்விடங்களில்லாத ஒரு பகுதிக்குள் சிறிலங்கா இராணுவம் முடக்கப்பட்டால் தான் ஒரு சுமூக நிலையை உருவாக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளோம். போலியான குற்றச்சாட்டுக்களை எம் மீது சுமத்திக் கொண்டு பொதுமக்களை இராணுவம் படுகொலை செய்து வருவதை ஒரு யுத்த சூழலாகவே நாம் கருதுகிறோம்.

போக்குவரத்துப் பாதைகளை மூட என்...கள் மக்கள் மீது இராணுவ நெருக்குவாரங்களை ஏற்படுத்துவது ஓர் அப்பட்டமான யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும். இந்த நடவடிக்கையால் ஒப்பந்தம் இன்னும் அமுலில் உள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது. பாதை மூடப்பட்டதால் 6 மாத கைக் குழந்தை ஒன்று மருத்துவ வசதிகளின்றி வீதியிலேயே மரணித்துள்ளது. இந்தச் சம்பவத்தையும் இன்று யசூசி அகாஷியிடம் சுட்டிக்காட்டினோம். அவர்களும் தங்களது வருத்தத்தைத் தெரிவித்தனர்.

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேணவோ, சமாதானத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கவோ கூடாது என்கிற மன நிலையில்தான் அரசும் அரச படைகளும் உள்ளன. அரசின் இத்தகைய நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாகவே யுத்த நிறுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, தமிழர்களை மீண்டும் யுத்தத்துக்குள் தள்ளுகிற ஒரு செயல். அதனை நாங்கள் அப்படியே பார்க்கிறோம் என்றும் அகாசியிடம் கூறினோம்.

### சர்வதேச சமூகத்தினர் விரைந்து செயற்படவேண்டும்

தொடரும் இனப்படுகொலையை நாங்கள் அனுமதித்துக் கொண்டிருக்கமுடியாது. மஹிந்த ராஜபக்ஷ அரசினது இந்த வன்முறைப் போக்கை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச சமூகம் விரைந்து செயற்பட வேண்டும். இல்லையெனில் விடுதலைப் புலிகள் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். சர்வதேச சமூகமும் இதற்காகத் தீவிரமாக முயற்சிப்பதாக எங்களிடம் கூறியுள்ளது.

இப்போது தமிழர் தேசத்தில் யுத்த நிறுத்தச் சூழல் என்பது இல்லை. இராணுவம் அடாவடிகளையும் வன்முறைகளையும் மக்கள் மீது ஏவிவிட்டுள்ளது. இனப்படுகொலை நிகழும், மக்களது இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கும் ஒரு யுத்த சூழல் தான் இங்கு உள்ளது. அரசினது இந்த நிலைப்பாடுகள் விரைந்து முடிவுக்குக் கொண்டு வரப்படாவிட்டால் நிலைமைகள் மேலும் மோசமடையும் என்றும் ஜப்பான் குழுவினரிடம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஜெனீவாப் பேச்சுக்குச் செல்வதற்கு விடுதலைப் புலிகள் எப்போதும் தயாராகவே உள்ளனர். ஆனால் பேச்சுக்குச் செல்ல விடாமல் தடைகளை ஏற்படுத்தியது ஸ்ரீலங்கா அரசாங்கம்தான். கடந்த 4 ஆண்டுகாலமாக நடைமுறையில் இருந்த போக்குவரத்து ஒழுங்குகளை முடக்கி நெருக்கடியை அரசு தான் ஏற்படுத்தியது. மக்கள் படுகொலைகளும் தொடர்கின்றன. இந்த நிலைமைகள் சீராகும் வரை நாங்கள் பேச்சுக்குச் செல்ல முடியாது.

சர்வதேச சமூகத்தின் விருப்பத்துக்கு முரணாகவும் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு முரணாகவும் தமிழர் தேசத்தில் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொடூர வன்முறை நிலைமைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். ஆகையால் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் எதிர்காலத்தில் எடுக்கக் கூடிய முடிவுகள் குறித்து சர்வதேச சமூகம் விளங்கிக் கொள்ளவேண்டும். விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உருவாகியுள்ளது என்பதை எமது தலைமைப்பீடத்தின் சார்பில் ஜப்பான் சிறப்புத் தூதுவர் அகாஷியிடம் தெரிவித்தோம்.

### போரை அரச படைகள் தொடங்கிவிட்டன

தமிழர் தேசத்தில் போரை அரச படைகள் தொடங்கிவிட்டன. இராணுவ ஆக்கிமிரப்புப் பிரதேசங்களுக்குள் இளைஞர்கள், யுவதிகள் இலக்கு வைத்து படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள்.

முகமாலையை அண்மித்த பகுதிகளில் படைகளைக் குவித்து வைக்கிற இராணுவத்தால் வன்னி மீது ஒருபோதும் படை

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## விளைவுகளுக்கு அரசே பொறுப்பு

ஏற்கனவே இரு தடவைகள் ஒத்திப் போடப்பட்ட ஜெனிவாப் பேச்சுக்கள் மிக விரைவில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் அருகி வருகின்றன.

ஒட்டுக்குழுக்களின் தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை சமாதானப் பேச்சு சாத்தியப்பட மாட்டாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் 'ரோய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய செவ்வியில் மிகவும் அழுத்தமாகத் தெரிவித்துவிட்டார். அதுமட்டுமல்ல, அரச படைகளின் ஒத்தாசையோடு ஒட்டுப்படையாக இயங்கும் கருணா தலைமையிலான ஆயுதக்குழுவினரிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்து அவர்களை நிர்மூலமாக்கும் முழுப் பொறுப்பையும் விடுதலைப் புலிகள் கையேற்பதைத் தவிர அவர்களுக்கு வேறு மாற்றுவழி கிடையாது என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விஷேட தூதுவர் யசூஷி அகாஷி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக கிளிநொச்சி புறப்பட இருந்த சமயம், தற்போதைய நெருக்கடியில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு மற்றும் ஒரு தடவை தெளிவாக வலியுறுத்தப்பட்டு இருக்கிறது.

இலங்கையில் மோசமடைந்து வரும் இன வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழீழ விடுதலைப் புலிகளையும், இலங்கை அரசையும் பேச்சு மேசைக்குக் கொண்டு செல்லும் முயற்சியாக, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முன்னணி வகிக்கும் ஜப்பானின் விஷேட தூதுவர் அகாஷி அவசர விஜயம் மேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ளார்.

கிளிநொச்சி செல்வதற்கு முன்னர் கொழும்புத் தலைமைகளுடன் இவர் நடத்திய பேச்சுகள் தற்போதைய நெருக்கடி நிலையை அகற்றுவதற்குப் பயனளிக்கக் கூடியவையாக இருந்திருக்கும் என்று கருதமுடியாது. புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவர உதவும்படி வெறுமனே கோரிக்கை விடுத்தால் காரியம் நிறைவேறி விடுமா?

அரசின் கடும்போக்குக் காரணமாக யசூஷி அகாஷி கிளிநொச்சியில் நடத்தப்போகும் பேச்சும் பயனளிக்கப் போவதில்லை.

ஏனெனில், ஒட்டுக்குழுக்களின் தாக்குதல்கள் தொடரும் வரை விடுதலைப் புலிகள் பேச்சுக்குச் செல்வதற்குத் தயார் இல்லை என்பது தற்போது தெளிவாக தெரிவிக்கப்பட்டு விட்டது. பேச்சுக்கள் நடைபெற வேண்டுமானால் ஒட்டுக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும். ஒட்டுக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதற்கு அரசு தயார் இல்லை.

கடைசியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒட்டுக்குழுக்கள் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி புலிகளினால் முறியடிக்கப்பட்டு உள்ளது. கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் இருந்து வந்தே இவர்கள் தாக்குதல் முயற்சியை மேற்கொண்டனர் என்று புலிகள் குற்றம் சாட்டுகின்றனர். ஒட்டுக்குழுக்களின் உதவியுடன் இன அழிப்பு யுத்தம் ஒன்றை நடத்த அரசு தயாராகி வருவது தெரிகிறது.

ஆகவே, எந்நேரமும் போர் வெடிக்கக் கூடிய ஆபத்தே தற்போது வடக்கு - கிழக்கில் நிலவி வருகிறது. போரா, சமாதானமா என்பது மஹிந்தரின் கையிலேயே இருக்கிறது.

நெருக்கடி தீருவதற்கு ஒரே வழி ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவது தான். 2002 பெப்ரவரி யுத்தநிறுத்த ஒப்பந்தமே ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் அவர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தில் இணைத்துக் கொண்டு வடக்கு - கிழக்கிற்கு வெளியே அனுப்ப வேண்டும் என்றும் தெளிவாகக் கூறுகிறது.

ஜெனீவாவில் நடைபெற்ற முதலாம் சுற்றுப் பேச்சிலும் இது தொடர்பாக இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்து இருந்தனர். தற்பொழுது ஒட்டுக் குழுக்கள் என்று எதுவும் இல்லை என்று கூறுவது நிலைமை பாரதூரமடையவே வழி வகுக்கும்.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைய புலிகளுக்கு உள்ள ஒரே வழியான அவர்களைத் தாக்கி நிர்மூலம் செய்யும் நடவடிக்கையை புலிகள் முழு அளவில் ஆரம்பிப்பார்களானால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு மஹிந்தரே பொறுப்பு ஏற்கவேண்டும்.

# ஆசிரியர் சேவையின் அடிப்படையிலான சம்பள உயர்வு கிடைப்பதில் தாமதம்

அச்சுவேலி, மே 10

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையிலான சம் பள உயர்வை பெற்றுக் கொள்வதில் மேலும் தாமதம் ஏற்படலாம் என ஆசிரியர்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரி யர் சேவைப் பிரமாணக் குறிப்பு சுற் றிக்கை 04/2005 இன் பிரகாரம் 90 வீதமான ஆசிரியர்களுக்கு சம்பள அதி கரிப்பும் அதனோடு கூடிய ஆசிரியர் சேவை பதவி உயர்வும் பெறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு. அது தொடர்பான நடவடிக்கைகள் உரிய முறையில் வலயக் கல்வி அலுவலகங்களால் மேற்கொண்டு முடிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பள உயர்வை உரிய அளவில் வழங்குவதற்கு இறுதியாக ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்டிருக்கும் சம்பள அடிப்படை அளவு அவசியம் தேவை. ஆனால், ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அளவிலும் குறைந்த அளவிலேயே சம்பளத்தை பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையிலான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமல் இந்தச் சம்பள உயர்வு வழங்கப்பட்டால் குறைந்த அளவிலேயே சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையிலானசம்பள அதிகரிப்பு பதவி உயர்வுகளை வழங்குவதில் வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாணக் கல்வி அலுவலர்களால் கடைப் பிடிக்கப்பட்டுவரும் அசமந்தப் போக்கு ஆசிரியர்கள் மிகுந்த சிந்தனை அடிப்படையிலான சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொள்வதில் தடங்கல்களை ஏற்படுத்தும் அல்லது பெறவேண்டிய அளவுத்திட்ட சம்பள அதிகரிப்புக்கு குறைவான அளவில் சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொள்ள வேண்டி இருக்கும் என ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(11)

# சுனாமி பாதித்த மக்களுக்கென ஜீவன்சக்தி கடனுதவித் திட்டம்

யாழ்ப்பாணம், மே 10

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஜீவன் சக்தி கடன் திட்டம் வடக்கு-கிழக்கில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு 50 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது.

இக்கடன் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி ஆகிய வற்றினூடாக வழங்கத் திட்டமிப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களில் மீளச் செலுத்தக்கூடிய இக்கடனுக்கு வருடாந்தம் 8 சதவீத அடிப்படையில் வட்டி அறவிடப்படவுள்ளது.

இத்திட்டம் வெற்றியளிப்பதற்கு நாடளாவிய ரீதியில் 101 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கடன் திட்டம் 5 ஆயிரத்தில் இருந்து 50ஆயிரம் ரூபா வரை மட்டுமே வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(185)

# இறக்குமதி எள் விற்பனையால் உள்ளூர் உற்பத்தியில் முடக்கம்

சுழிபுரம், மே 10

இறக்குமதி செய்யப்பட்ட எள் விற்பனைக்கு விடப்பட்டதால் உள்ளூரில் உற்பத்தி செய்த எள்ளை சந்தைப் படுத்த முடியாதுள்ளது. இதனால் தாம் நஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுழிபுரம் பகுதியில் இம்முறை எள் அறுவடை நல்ல பயனைக் கொடுத்துள்ளது. உள்ளூரில் விளைந்த எள்ளுக்கு வரவேற்பு இருந்த போதும் இதனை இலாபமான விலைக்கு விற்க முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட எள் ஒரு கிலோசுமார் எண்பது ரூபாவிற்கு விற்கப்படுவதாகவும்-

இதனால் உள்ளூரில் விளைந்த எள்ளை இதைவிடக் குறைந்த விலைக்கே விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய குறைந்த விலையில் எள்ளை விற்றால் தாம் நஷ்டமடைய நேரிடும் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இதேவேளை-

நவாலியில் எள்ளுப் பயிர்ச்செய்கை வெற்றியளித்து வருகின்றது. ஆனால், கட்டாக்காலிகளின் தொல்லையால் விவசாயிகள் எள்ளுப் பயிர்ச் செய்கையைக் கைவிடவேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது.

கட்டாக்காலிக் கால்நடைகள் சம்பந்தமாக விவசாய சம்மேளனம் ஆக்க பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

(28-185)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை தேசிய அடையாள அட்டை அவசியம்

கொழும்பு, மே 10

இம்மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்கவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 22ஆம் திகதி முதல் ஜூன் 15ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு இரண்டு லட்சத்து 40 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். 1,800 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டையை வைத் திருக்கவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும், அது தவிர்ந்த ஏனைய எந்த அடையாள அட்டைகளும் பரீட்சை மண்டபத்தில் செல்லுபடியற்றவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-12)

## உதயவாக்கு

வாக்குறுதி முழுமதி போன்றது. கொடுத்த வாக்குறுதியை உடனே நிறைவேற்றாவிட்டால், அது நாளுக்கு நாள் தேய்ந்துவிடும்.

## நாளை

சித்திரை : 28
வியாழக்கிழமை
11.05.2006
திதி : திரயோதசி
முற்பகல் : 11.05
நட்சத்திரம் : சித்திரை
முன்னிரவு : 7.13
[illegible] : 07.24 - 08.54
ராகுகாலம் : 01.24 - 02.54

# மானிப்பாய் நகரசபையை உருவாக்க ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,மே 10

வலி.தென்மேற்கில் இரு உப - அலுவலகப் பிரதேசங்களை உள்ளடக்கி மானிப்பாய் நகரசபை உருவாக்குவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நகரசபை உருவாக்கம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசம் நான்கு உப அலுவலகங்களை கொண்டது. இங்கு மானிப்பாய் பட்டினத்தையும் ஆனைக்கோட்டை கிராம உப அலுவலகத்தையும் ஒன்றாக இணைத்த வகையில் மானிப்பாய் நகர சபையாக தரம் உயர்த்த சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதற்குரிய ஆவணங்கள், வரைபடங்கள் என்பன உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஏனைய இரு உப அலுவலங்களான பண்டத்தரிப்பு பட்டின சபையையும் மாதகல் கிராம உப அலுவலகத்தினையும் இணைத்த வகையில் பண்டத்தரிப்பு பிரதேசசபையை உருவாக்கவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் 2002 இல் இருந்து மானிப்பாய், நல்லூர், நீர்வேலி ஆகிய மூன்று பிரதேச சபைகள் நகர சபையாகத் தரம் உயர்த்தப்பட்டு மாற்றம் செய்யப்படும் என அறிவித்து மூன்று வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

தற்போது யாழ்.மாவட்டத்தில் 6பிரதேச சபைகள் நகர சபைகளாகத் தரம் உயர்த்தப்படும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் உரிய ஆவணங்களை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக தமக்கு அனுப்பி வைக்கும் படி அரசாங்க அதிபர் கோரியிருந்தார் - என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

(185)

# நவோதயா பாடசாலைகள் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், மே 10

வடக்கு - கிழக்கில் இயங்கும் 36 நவோதயா பாடசாலைகள் ''இனங்காணப்பட்ட குறிக்கோள்'' அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று கல்வி அமைச்சின் நவோதயா பாட சாலை திட்டப்பணிப்பாளர் ஏ.கே குணதிலக் அறிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 8 மாகாணங்களில் இருந்து 378 பாடசாலைகள் இத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு நவோதயா பாடசாலைக்கும் 25 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

(185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டுநகர், சிந்துபுரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநகர், கனகபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட

கலாவிநோதன்
**பொன்.பஞ்சாட்சரசிவம்**

அவர்கள் கலாபூஷண விருதுத் தேர்வில் தெரிவாகி உள்ளமையைப் பாராட்டி இவர் கலைப்பணி மேன்மேலும் சிறக்க கலைத் தாயை வேண்டி நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(சி/49228) **கிளி.கனகபுரம் வாழ் மக்கள்.**

# உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகள் – 2006

எதிர்வரும் 2006 ஜூன் 5ஆம் திகதி உலக சுற்றுப்புறச் சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தால் நடத்தப்படும் போட்டிக்கு கவிதை, கட்டுரை, கார்ட்டூன், புகைப் படம் போன்ற துறைகளில் ஆர்வம் உள்ள படைப்பாளர்களிடம் இருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**போட்டி விதிமுறைகள்**

**கவிதை, கட்டுரை, கார்ட்டூன், புகைப்படம்:**

* ஆக்கங்கள் யாவும் சுற்றுப்புறச் சூழல் மாசடைவதால் ஏற்படும் பாதிப்புக்களையும் தாக்கங்களையும் உள்ளடக் கியதாக இருத்தல் வேண்டும்
* கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக்கவிதை களாவோ இருக்கலாம்.
* ஆக்கங்கள் யாவும் சொந்தமா வையாக இருத்தல் வேண்டும்.
* கட்டுரைகள் யாவும் தெளிவாகவும் 250-300 சொற்களுக்கு இடைப்பட்டதாக அமைதல் வேண்டும்.
* ஆக்கங்கள் யாவும் தெளிவான எழுத்துப் பிரதிகளாக இருத்தல் வேண்டும்.
* கார்ட்டூன்கள் B4 (25 cm அகலம் 35.3 cm உயரம்) அளவு தாளில் வரையப்படுதல் வேண்டும்.
* புகைப்படம் 7x5 அங்குல அளவில் இருத்தல் வேண்டும்.

*குறிப்பு*

* இப்போட்டியில் வயது வித்தியாசமின்றி யாவரும் பங்குபற்றலாம்.
* இந்த ஆக்கங்கள் அனைத்தும் 25.05.2006 வியாழக் கிழமைக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப் படல் வேண்டும்.
* எந்தவோர் ஆக்கத்திலும் புகைப்படத்திலும் படைப்பாளி யின் பெயர் இருத்தல் ஆகாது. அது தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு அல்லது அச்சடிக்கப்பட்டு ஆக்கத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.
* தெரிவுசெய்யப்படும் ஆக்கங்களுக்கும் புகைப்படங்களுக் கும் மிகப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

***ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி:***

**சூழல் நல்லாட்சி ஆணையகம்,**
**திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகம்,**
**பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.**

(சி/49227)

# ஆறாத்துயரில் 45ஆம் நாள்...



பண்புள்ள மகனாக
பணிவுள்ள தம்பியாக
அன்புள்ள அண்ணனாக
பிரியமுள்ள நண்பனாக
பாரினில் பந்தங்களுடன்
பவிசாக வாழ்ந்த நீ
பாசமுள்ள நெஞ்சங்களை மறந்து
பழகிய சொந்தங்கள் துடிதுடிக்க
வாழ்ந்த காலங்கள் போதும் என்றா?
இவ்வுலகை விட்டு நீங்கினாய்
நண்பர்களுடன் சென்ற நீ
நலமுடன் வருவாய் என நாம்
காத்திருக்க உன் உடல் மட்டும்
மரண ஊர்வலமாய் வந்ததேனோ?

## வி.சதீஸ்குமார்

| தாயின் மடியில் | கடுகதியின் பிடியில் |
|---|---|
| 12.03.1984 | 26.03.2006 |

26.03.2006 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துய ரில் ஆழ்ந்துவிட்ட விஜயரட்ணம் சதீஸ்குமார் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று(09.05.2006) செவ்வாய் கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

*(ரட்ணம் பந்தல்)*
*மூணாமலை வீதி,*
*சுதுமலை,*
*மானிப்பாய்.*

(50056) **- குடும்பத்தினர்.**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் 4½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 4202623. (சி-49187)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் கோப்பாய் வீதியில் ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு 0779672122, 0777159721. (50075)

## அபூர்வ ஜோதிடம்

தீராத கொடிய நோய் பாரிசவாதம் குண மாக்கும் மருந்தியல் உயர் அதிஷ்ட பலா பலன் பெறல். தொடர்பு : சனி, ஞாயிறு 8.30 - 2 p.m உயரப்புல பிள்ளையார் கோவிலடி, விதானையார் வளவு, ஆனைக்கோட்டை. (50077)

## N.C.A. K.K.S. Road, Inuvil

**A/L 2006**

**மாபெரும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**

*காலம் :* 12, 13, 14/05/06
(வெள்ளி, சனி, ஞாயிறு) 8 a.m
*இடம் :* இணுவில் மத்திய கல்லூரி
(மேற்பிரிவு மண்டபம்)

| | | |
|---|---|---|
| தமிழ் | : | நாக. தமிழிந்திரன் |
| இ. நாகரிகம் | : | S.ஜெயக்குமார் |
| அளவையியல் | : | S.R.J.சுதன் |
| நாடகம் | : | K.திலகநாதன் |
| | | S.சிறீகணேஸ் |
| | | S.சுந்தரேஸ் |
| | | B.கணேசதுரை |
| | | M.சந்திரன் |

*பதிவுகளை N.C.A. அலுவலகத்தில் முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்* (50071)

# வெசாக்கையொட்டி பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு,மே10

வெசாக் தினத்தைமுன்னிட்டு இன்று முதல் கொழும்பு நகர் உட்பட நாட்டின் முக் கிய நகரங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப் படவுள்ளது என்று பிரதிப் பொலீஸ்மா அதி பர் இலங்கோன் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளின் பாதுகாப்பு தொடர்பான உயர்மட்ட மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

வெசாக் தினத்தைமுன்னிட்டு வழமை போலவே இம்முறையும் அதிகளவிலான மக்கள் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தச் சமயத்தில் திருடர்கள் தொல்லை உட்பட மக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌ கரியுங்களை கருத்திற்கொண்டே பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

வெசாக் தின நெருக்கடிகளைப் பயன் படுத்தி விடுதலைப்புலிகள் பெருமளவில் கொழும்புக்குள் ஊடுருவக்கூடிய சாத்தி யங்கள் இருக்கின்றன என்றும் படைத் தரப்பில் கருதப்படுகின்றது. இத்தகைய ஊடுருவலைத் தடுப்பதற்காகவும் பாது காப்பை பலப்படுத்தவேண்டிய தேவை ஏற் பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (க)

# யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

## தரம் 5 பெற்றோர் சந்திப்பு

மேற்படி இம்மாதத்திற்கான பெற்றோர் சந்திப்பு இன்று (10.05.2006) புதன்கிழமை பி.ப 3.00-பிப 3.30 மணி வரை மட்டும் நடைபெறவுள்ளது. தவறாது கலந்துகொள்ளவும்

(50072) **அதிபர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| *மண்ணில்* | | *விண்ணில்* |
|---|---|---|
| 18 | | 22 |
| * |  | * |
| 04 | | 04 |
| * | | * |
| 0000 | | 2005 |

அமரர்

## இரத்தினம் அருந்தவராஜா (றஞ்சன்)

திதி : 10.05.2006

குலவிளக்கே அணைந்தாலும் குறையேதும் வைக்கவில்லை
ஓராண்டு சென்றாலும் ஓயவில்லை எம் துயரம்
ஆறாகப் பாய்ந்து வந்து ஆற்றிடுவாய் எம் துயரம்
மாறாக நாம் உமது மாண்பிற்காக வேண்டுகிறோம்

*465, கே.கே.எஸ் வீதி,*
*தட்டாதெரு ,*
*யாழ்ப்பாணம்.* (50074)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| *மண் நெகிழ* | | *கண் நெகிழ* |
|---|---|---|
| 25 | | 10 |
| * |  | * |
| 12 | | 04 |
| * | | * |
| 1932 | | 2006 |

## அமரர் சிவசுப்பிரமணியம் நாகம்மா

*ஆயிரம் உறவுகள் வந்து வந்து சென்றாலும்*
*ஆயினும் உங்களின் உறவொன்றே நிலைத்து நிற்கும்*
*உங்களின் நினைவன்றி உள்ளத்தில் வேறில்லை எம் தாயே!*

10.04.2006 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் இருந்து உதவி புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் -

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.05.2006) புதன்கிழமை நடைபெறும். இந்நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்வதோடு, அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த் திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் வடக்கு. உரும்பிராய்*
T.P: 222 5327 (50065)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.
(சந்திரன் கடை)

# மனிதவள மேம்பாட்டுப் பகுதி

# நிதித்துறை

## கணக்கியற் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து கணக்கியற் பயிற்சிநெறிக்கான வேண்டு கள் கோரப்படுகின்றன.

*தகைமைகள் :*

01) கல்வித் தகைமை :
க.பொ.த. சாதாரண தரத்தில் த்மிழ், கணிதம் ஆகிய பாடங்களில் தேர்ச்சியடைந்திருந்தல் வேண்டும்.

02) அகவை - 16 தொடக்கம் 21 வரை
குறிப்பு :
01) வேண்டுகை முடிவு நாள் - 20.05.2006
02) நேர்காணல் நடைபெறும் நாள் - 24.05.2006 காலை 9 மணி

03) நேர்காணல் நடைபெறும் இடம் -
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

04) நேர்காணலுக்கு வருகை தருவோர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படி களுடன் வரவேண்டும்.

05) பயிற்சிக் காலத்தில் தங்குமிட வசதி உண்டு.
* மாதந்தோறும் ரூபா ஐயாயிரம்(5000) உதவு தொகையாக வழங்கப்படும்.
* உணவு வழங்கப்படும். உணவுச்செலவு உதவு தொகையிலிருந்து கழிக்கப்படும்.

06) வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி

07 பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்

ஆளுகை
மனிதவள மேம்பாட்டு பகுதி,
நிதித்துறை.

(சி/49229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழீழ நுண்கலைப் பிரிவின் மல்லாவி நுண்கலைக் கல்லூரியில் ஏப்ரல் மாதத்துக்கான மாதாந்தத் தமிழிசை அரங்கு அண்மையில் நடைபெற்றது. இதில் கல்லூரி மாணவர்களின் இசை நிகழ்வும், இசைக் கலாமணி திருமதி ஸ்ரீ. சுபத்திராதேவியின் வயலின் இசைக்கச்சேரியும் நடைபெறுவதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

### கற்றல் உபகரணங்கள்

புதுக்குடியிருப்பு,மே10

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவுக்கிளை 'செந்தளிர்' சிறுவர் இல்லத்திற்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கியுள்ளது.

கடந்த மாதம் 13ஆம் திகதி நிர்வாக உத்தியோகத்தர் கு.மகாலிங்கம் தலைமையில் செஞ்சிலுவைச் சங்க குழு 'செந்தளிர்' இல்லத்திற்கு விஜயம் செய்து சுமார் 116 மாணவ மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள், பென்சில், பேனா, புத்தகப்பை என்பன அடங்கி பொதிகளை அன்பளிப்பாக வழங்கியது.

இவற்றுடன் பாடசாலைச் சீருடைத் துணிகளும் வழங்கப்பட்டன. (353)

கண்டாவளைப் பிரதேசத்தில்

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு 143 நிரந்தர வீடுகள் கையளிப்பு

பரந்தன், மே 10

கண்டாவளைப் பிரதேசச் செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 143 நிரந்தர வீடுகள் கையளிக்கப்படும் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கல்லாறு கிராமத்தில் பிரதேச செயலர் சீ.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரைக் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

மாவட்ட மேலதிக அரச அதிபர் த.வேதநாயகன், அரசியல்துறைப் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகி யோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

இதனையடுத்து புதிதாக அமைக்கப்பட்ட 143 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

கையளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து பரந்தன் கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப்படவுள்ள மக்கள் கடைக்கான அடிக்கல்லை கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் நாட்டி வைத்தார்.

சேவாலங்கா நிறுவனத்தால் 20மீனவர்களுக்கும் கொழும்பு மனித நேய நிறுவனத்தால் 30 மீனவர்களுக்கும் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள்,வலைகள் என்பன வழங்கப்பட்டன.

தொடர்ந்து சுண்டிக்குளம் கட்டடி என்ற இடத்தில் சேவாலங்கா நிறுவனத்தால் புதிதாக அமைக்கப்பட்ட மீன் ஏல விற்பனை நிலையத்தின் பெயர்ப்பலகையை அரச அதிபர் திரைநீக்கம் செய்துவைத்ததுடன் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

43வீடுகளை யு.என்.கபிற்றாஸ் நிறுவனமும் மிகுதி 100 வீடுகளை ஜனாதிபதி நிதியம் மற்றும் சேவாலங்கா நிறுவனம் ஆகியனவும் அமைத்துக்கொடுத்துள்ளன.

43 வீட்டுத்தொகுதிகளின் பெயர்ப்பலகையை அரச அதிபர் திரை நீக்கம் செய்ததுடன் முதலாவது வீட்டினை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

100 வீட்டுத்திட்டத்தின் பெயர்ப்பலகையைத் தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரை நீக்கம் செய்து வைத்ததுடன் முதலாவது வீட்டை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

மிகுதி வீடுகளை அரச அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் உத்தியோகத்தர்கள்ஆகியோர் திறந்து வைத்தனர்.

சேவாலங்கா நிறுவனத்தால் 20 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா சுயதொழில் வியாபாரக் கடன் திட்டத்தின் கீழ் கரைச்சிப் பிரதேச சபையின் முரசுமோட்டை உப அலுவலகத்தால், இக்குடியேற்றத்திலுள்ள பொதுச் சந்தைப் பகுதியில் 20 வர்த்தக நிலையங்களுக்கான நிலம் வழங்கப்பட்டது. (352)

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

கிளிநொச்சி,மே10

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள TR ரெக் நிறுவனத்தில் பயிற்சிகளை மேற்கொண்டு நிறைவு செய்த 84 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 6ஆம் திகதி காலை நடைபெற்றது.

கணனிப்பயிற்சி மற்றும் ஆங்கில கல்வியினை நிறைவு செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

TR ரெக் இணைப்பாளர் பிரதாப் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரினை வடமராட்சி கிழக்கு கடற்றொழில் மீனவசங்கங்களின் மேலாளர் மோகன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை இளையோர் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் நரேன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. அதனை அடுத்து நடமாடும் கணனிப்பயிற்சி நிலையத்தினை யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி க.தேவராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கணனியை பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா ஆரம்பித்து வைத்தார்.

சான்றிதழ்களை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், பேராசிரியர் தேவராஜா, இளையோர் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் நரேன், பேராசிரியர் நவரட்ணராஜா ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் TR ரெக்கில் கல்வியினை மேற்கொள்ளும் மாணவர்களும் கல்வியினை நிறைவு செய்து சான்றிதழ் பெறவந்தவர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு

கிளிநொச்சி,மே10

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து நிலவிவருகின்றது. ஓமந்தை மற்றும் உயிலங்குளம் சோதனைச் சாவடிகள் அடிக்கடி மூடப்படுவதனால் எரிபொருள்களுக்கான தட்டுப்பாடும் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடும் தொடர்ந்து நிலவி வருகின்றது.

கிளிநொச்சி நகரில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு எரிபொருள்களை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநியோகிக்கின்றன.

பெருமளவான எரிபொருள் விற்பனை நிலையங்கள் பல நாள்களாக மூடப்பட்டுள்ளன. ஒரு சில எரிபொருள் நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த நிலையங்களில் பெருமளவான மக்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருளைப் பெற்று வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

### திருவடி அபிஷேகம்

யாழ்ப்பாணம்,மே10

செல்லத்துறை சுவாமி மகா அத்தம் கூடிய நட்சத்திரமான் இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். சிவத்தொண்டன் நிலையத்தில் திருவடி அபிஷேகம் இடம்பெறவுள்ளது.

## கிட்டுவின் ஓவிய நூல் வெளியீடும் வெள்ளைக்கோடுகள் கண்காட்சியும்

வங்கக் கடலில் காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்களின் பிரசுர வெளியீடும், சோ.சி.கலைக்கதிரின் கறுப்பு, வெள்ளைக் கோடுகள் ஓவியக் கண்காட்சியும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் முற்பகல் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் பணிப்பாளர் தணிகைமாறன் ஏற்றி வைக்க, தேசியக்கொடியைக் கிளிநொச்சி நுண் கலைக் கல்லூரி முதல்வர் இசைஞன் ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரை கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வளநாடன் ஏற்றி வைக்க மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்களின் பிரசுரத்தை மூத்த ஊடகவியலாளர் ராதேயன் வெளியிட ஓவியர் ஓவியநாதன் அதனைப் பெற்றுக்கொண்டார்.

சோ.சி.கலைக்கதிரின் ஓவியக் காட்சிக் கூடத்தை ஊடகவியலாளர் ராதேயன் திறந்து காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

# மலையகத் தலைவர்கள் இரட்டைவேடம்; தமிழ்மக்கள் அதனை உணரவேண்டும்!

## மேலக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் அறிக்கை

"அனைத்துக் கட்சி மாநாட்டில் அரசு முன்வைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையை மலைநாட்டின் இரண்டு தமிழ் கட்சிகளான மலையக மக்கள் முன்னணியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டுள்ளன." - இவ்வாறு மேலக மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் ந.குமரகுருபரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை மாத்திரம் நியாயப்படுத்தும் இந்தக் கூட்டறிக்கை சர்வதேச ஊடகங்களையும் சாடியுள்ளது. நாட்டில் இன்று நிகழும் வன்முறைச் சம்பவங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் எந்தவொரு வன்முறைச் சம்பவமும் இந்தக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

இந்நிலையில் இத்தகைய பக்கச்சார்பான கூட்டறிக்கையில் முதல் நாள் கொழும்பில் கையெழுத்து வைத்துவிட்டு அடுத்த நாள் ஹட்டனில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் 'புலிகளுடன் கூட்டுச் சேரப் போகின்றேன்' என்று வீரவசனம் பேசியுள்ள மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனின் இரட்டை வேடத்தைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்'

தொடர்ச்சியாகத் திருகோணமலையிலும், மூதூரிலும், சம்பூரிலும் அப்பாவித் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்களையும் அங்கு நடைபெற்றுவரும் படுகொலைகளையும் கடுமையாகக் கண்டிக்கவேண்டும். மேல் மாகாணத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள தலையில்லாத உடல்களைப் பற்றியும் குறிப்பிட்டாகவேண்டும். வன்முறை எந்த ரூபத்தில், எந்த இடத்தில், எவரால் செய்யப்பட்டாலும் அவற்றைக் கண்டித்தே ஆகவேண்டும். இதன் மூலமாகவே நிரந்தரமான சமாதானத்தையடைய முடியும். இத்தகைய பக்கச்சார்பான இக்கூட்டறிக்கையில் மேலக மக்கள் முனனணி கையெழுத்திடவில்லை. மலையகத்தின் இரண்டு கட்சிகளும் கையெழுத்திட்டு அரசின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தியுள்ளன. இது இந்த கட்சிகளின் சந்தர்ப்பவாத சுயநல அரசியலாகும்.

மலையகத்தின் அப்பாவித் தமிழ் மக்களின் மத்தியில் புலிகளைப் பற்றிய வீரவசனங்களைப் பேசிவிட்டு கொழும்பில் ஆட்சி புரிகின்ற ஆட்சியாளர்களிடம் சோரம் போவது என்ற அரசியலை இவர் தொடர்ந்தும் செய்துவருகின்றார். மலையகத்திலும் நுவரெலியாவிலும், மேலகத்தில் கொழும்பிலும் வாழும் தமிழ் மக்கள், மலையக மக்கள் முன்னணித் தலைவரை அடையாளம் கண்டுகொள்ள வேண்டியவேளை வந்துவிட்டது - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை அலுவலர்களுக்கு கொடுப்பனவுகள் அதிகரிப்பு

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சை மேற்பார்வை உத்தியோகத்தர்களாகவும், விடைத்தாள் திருத்துநகர்களாகவும் கடமையாற்றுவோரின் கொடுப்பனவுகள் 20 சதவீதத்தால் அதிகரித்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அதிகரித்த கொடுப்பன்வு எதிர்வரும் ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சையிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு, போக்குவரத்துச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு மேற்படிக் கொடுப்பனவை அதிகரிக்குமாறு பரீட்சைத் திணைக்களத்திற்குக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த விடுத்த பணிப்புரைக்கமையவே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பரீட்சைகளுக்கான விடைத்தாள் திருத்தும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரித்து ஒரு பரீட்சை நடைபெற்று இரண்டு மாதங்களுக்குள் முடிவுகளை வெளியிடக்கூடிய வகையில் பரீட்சைத் திணைக்கள நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படுவதாக இவர் தெரிவித்தார்.

(க-231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

08.05.2006 இல் எம்மைப் பிரிந்த

**அமரர் கந்தசாமி நித்தியகல்யாணி**

(இறுதி வருட மாணவி, நாடகமும் அரங்கியலும், யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரோடு எமது துயரையும் பகிர்ந்து கொள்கிறோம்.

நுண்கலைத்துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழகம்.

(50079)

## அந்தியேட்டி அழைப்பு

கடந்த 10.04.2006 அன்று காலமான எமது குடும்ப விளக்கு

**திருமதி இராசையா சோதிமலர்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (10.05.2006) புதன் கிழமை காலை 6 மணியளவில் மலர்மகள் அல்வாய் வடமேற்கு, அல்வாய் என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக வேண்டிய அனைவருக்கும் தனித்தனியாக அறிவித்தல்களை உரியவாறு சேர்ப்பிக்க முடியாத காரணத்தினால் இந்தஅறிவித்தலை அன்புடன் ஏற்றுக்கொண்டு அன்னாரின் கிரியைகளிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*கணவர்* : இ.இராசையா
*மருமகன்* : ந.தமிழழகன்(லண்டன்)
*மகள்* : ரேவதி தமிழழகன் (லண்டன்)

(சி/49232)

## கரித்தாஸ் - கியூடெக்
## உத்தமசீலர்கள்



*ஆண்டவரே உம்மையே நம்பி இருப்பதால் உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக (திருப்பாடல் 33)*

சித்திரை திங்கள் 10ஆம் நாள்
யாழ். கரித்தாஸ் கியூடெக்கிற்கு
ஒரு கரிநாள், அதிர்ச்சி நாள்,
அவலநாள்.
எம் சக பணியாளர்கள்



**பத்மநாபன்**
(சிறுவர் இல்லங்களின் முகாமையாளர்)

**பிரதீப்குமார்**
(சமூக இசைவாக்கக் குழுத் தலைவர்)

இருவரையும் பலிகொடுத்த நாள்.

பயங்கர யுத்தம், இடப்பெயர்வு, பொருளாதாரத் தடை போன்ற காலகட்டங்களில் உயிரைப் பணயம் வைத்து மக்களோடு ஓடி அவர்கள் துன்பங்கள், துயரங்கள், இழப்புகள் யாவற்றிலும் கைகொடுத்துக் காப்பாற்றி மனித முன்னேற்றமே நோக்காகக் கொண்டு மனிதாபிமான உணர்வுகளுடன் பணியாற்றுகின்ற இந் நிறுவனம் 34 வருடங்கள் காணாத துன்பியல் நிகழ்வு கண்டு துயர்கொண்டுள்ளது.

எம் சகோதரப் பணியாளர்கள் இருவரும் குறுகியகாலம் இந்நிறுவனத்தில் பணியாற்றினாலும் அளப்பரிய சேவையினை உளத் தூய்மையுடன் உற்சாகத்துடன் அர்ப்பணிப்புடன் நிறைவேற்றிய உத்தமர்கள். 'மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார், கருமமே கண்ணாயினார்' எனும் அருச்சொற்றொடர்கேற்ப நேரம் களைப்புப் பாராது கடமையாற்றிய சேவைச் செம்மல்கள். உண்மை, நேர்மை, கபடமின்மை போன்ற பண்புகள் உடையவர்கள். அன்பு அரவணைப்புடன் சுனாமியால் பாதிப்புற்ற சிறுவர் களுக்கும் சமூகத்திற்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் பயமின்றி தம்பொறுப்புக்களை பணிவுடன் ஏற்று பண்புடன் நிறைவேற்றிய பணியாளர்கள். சொல்லவேண்டியவற்றைச் சொல்லவேண்டிய இடத்தில், சொல்லவேண்டிய முறை யில், சொல்லி நெறிப்படுத்திய வளவாளர்கள். தம் திட்டங்கள் செவ்வனே நிறைவேறவேண்டும். நிறுவனத்தின் சேவை சிறப்புற அமையவேண்டும் என்ற சிந்தனையுடன் 'நெற்றிக் கண் ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' எனச் சுட்டிக்காட்டி எம் சிறார்கள், எதிர்காலச் சந்ததியினர் சீர்பெற்று வாழவேண்டும். நலிவுற்ற நம் சமூகம் தலைநிமிர்ந்து முழு மனித மாண்புடன் வாழவேண்டும் என வாழ்ந்து காட்டிய சிந்தனைச் சிற்பிகள். படைத்தவன் அடியில் படைப்புகள் சங்கமம் ஆவது நியதி. இவர்களின் ஆன்மாக்கள் இறை நிழலில் அடையவேண்டி நிற் கின்றோம். அவர்கள் தம் அருமை சொந்தங்களுக்கும் அன்பர்கள், நண்பர்களிற்கும் ஆறுதல் நல்க ஆண்டவனை வேண்டுகின்றோம்.

"மண்ணில் வாழ்ந்து செல்லும் நண்பா
விண்ணில் இறைவன் இன்பம் தருவார்"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆக்கம்: செல்வி பெனடிக்ரா ஆந்ரேஸ்பிள்ளை.

பணிப்பாளர், பணியாளர்கள்,
கரித்தாஸ் - கியூடெக்

(சி/49236)


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Diploma in Hardware Engineering**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

Course Fee :- 2000/=
Free Study Pack & Driver CD
வகுப்புக்கள் ஆரம்பம் :-
15/05/2006 :- 08.30

Course Contents :-
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்.
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம். (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்.
- Software, Operating system இன்ஸ்ரோல் செய்தல்.
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.
- Operating System நிறுவும் முறை (Windows 98 & Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை. (Sound Card, Modem, VGA, TV Card, Printer )
- Trouble Shooting (File updating, Copying)

ஏனைய அனைத்துக் கணனிக்கற்கைநெறிகளிற்கான புதிய
12/05/2006, 13/05/2006, 14/05/2006 Morning:- 10.30 Evening :- 03.00


## வேலை ஆள்கள் தேவை

யாழ். திருநெல்வேலி, சுன்னாகப் பகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் நிறுவனம் ஒன்றிக்கு கணக்காளர் (பெண்) தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்பு : 0776696867.

(49957)

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் மகளிர் கல்லூரி
ஆசிரியை
திருமதி பாலஜெயந்தி விஜயகாந்தன்
அவர்களின் தாயார்

**திருமதி அன்னபூரணம் பாலசிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு துயரடைவதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம்.

(50083)

### சூரிய மின்கலம் அன்பளிப்பு

நெடுந்தீவு,மே10

நெடுந்தீவு கிழக்கு ஆலமாலகை கிராம குடியிருப்புத் திட்டத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு சூரிய சக்தி மின்கலங்கள் வழங்கப்படவுள்ளன.

பனங்காணிப் பகுதியில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளில் சூரியசக்தி மின்கலங்கள் வழங்குவது குறித்தும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினர் ஆலோசித்து வருகின்றனர். (111)

### இறைச்சிக்கடைகளை மூடும்படி பணிப்பு

நல்லூர்,மே10

2550 ஆவது புத்த வருடத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க் கிழமை முதல் எதிர் வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை வரை அனைத்து இறைச்சிக் கடைகளும் மூடப்படவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பிராந்தியத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(111)

### பிரதேச சபைக்கு புதிய கட்டடம்

'நீர்ப்' நிதி ஒதுக்கீட்டில் மானிப்பாய் பிரதேச சபைக்கெனப் புதிய தலைமை அலுவலகம் அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் இதற்கான துரித நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்.

புதிய கட்டட நிர்மானப் பணிக்கான அடிக்கல் நடும் வைபவம் இம்மாத இறுதியில் இடம்பெறலாம் எனத் தெரிய வருகின்றது.

கட்டடம் அமைவதற்கான ஆரம்ப கட்டவரைபடவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

(185)

## ஈரவிழிகளுடன் ஈராறு திங்கள் நினைவஞ்சலி

**அமரர் கார்த்திகா சண்முகநாதன்**
(திதி: 10.05.2006- திரயோதசி)



கார்த்திகா எங்கள் கண்ணே
கண்மணி நீயே அம்மா
நேர்த்தியாய் நிமிர்ந்து நிற்பாய்
நீ என நினைந்திருந்தோம்.
பூத்திடும் கமல பாதம்
துளிர்விக்கச் சென்றாய் போலும்
காத்திருப்போமே எங்கள்
கற்கண்டே காலமெல்லாம்.


| பன்னீர் சிந்த | கண்ணீர் மல்க |
|---|---|
| 10 - 07 - 1981 | 22 - 04 - 2005 |

*தகவல்:*
ப.பரமலிங்கம்
நெடுந்தீவு.

*பிரிவால் துயருறும்:*
அம்மா, அப்பா,
பேரன், பேர்த்தி, சகோதரர்கள்,
மைத்துனர், பெறாமகள்.

(50076)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்



**அமரர் அம்பலவாணர் குமாரவேலு**
(ஓய்வுபெற்ற அதிபர்)

| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 16.02.1924 | 10.05.2005 |

*நல்ல போராட்டத்தைப் போரடினேன்*
*ஓட்டத்தை முடித்தேன்*
*விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் (II திமோத்தேயு 4-7)*

பாரினில் நாம் ஏற்றத்துடன் வாழ ஏணியாய் நின்று
சீரும் சிறப்புமாக வாழ்வித்திட்டு
வழிகாட்டிய எங்கள் அன்பு அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எம் மனதை விட்டு என்றுமே பிரியமாட்டீர்கள்.

*132/1, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(50055)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சண்முகராஜா(Small)



நாயன்மார்க்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வே.சண்முகராஜா அவர்கள் 08.05.2006 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஓவசியர் வேலுப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான, முத்துராசா, செல்வராஜா மற்றும் செல்வநாயகி (நோர்வே), வாமசக்தி, சறோஜா, விஜயராணி ஸ்கந்தராஜா (கனடா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2006) புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுட்ல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்:

222,செம்மணி வீதி,
நல்லூர்.
T.P. : 0773086912

சகோதரிகள்: செல்வி வே.சறோஜா,
செல்வி வே.விஜயராணி
(ஓய்வுபெற்ற உப அதிபர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

(50073)

### ஆறுமுகம் குமாரசுவாமி
(சட்டத்தரணியும் நொத்தாரிசும்)

தொல்புரம் கிழக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சட்டத்தரணியும் நொத்தாரிசும் ஆகிய ஆறுமுகம் குமாரசுவாமி (M.A) அவர்கள் 08.05.2006 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாரயணசுவாமி(ஸ்ரேசன் மாஸ்டர்), மங்கையர்க்கரசி நவரட்ணம் (பிரபல வர்த்தகர் சங்கானை), இரத்தினம்மா மற்றும் தங்கரத்தினம் (தொல்புரம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை(ஓவசியர் சித்தங்கேணி), தாமோதரம்பிள்ளை (கணக்குப் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.ஸ்ரீராஜேஸ்வரன்(யாழ்.போதனா வைத்தியசாலை), தவனேஸ்வர ராஜா(புத்தளம்), காலஞ்சென்ற திருஞானேஸ்வரன்(ஜேர்மனி), பரமேஸ்வரன்(பிரான்ஸ்), நளாயினி(தொல்புரம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மனோகரன் (சட்டத்தரணி கொழும்பு), சி.ஸ்கந்தமயம் (சித்தங்கேணி),பரமநாதன்(நிரஞ்சனாஸ் உரிமையாளர், சங்கானை) ஆகியோரின் சிறிய தகப்பனாரும், கோபிநாத், துவாரகன், சாந்தினி(யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை), விதுஷன்(ஜேர்மனி), பிரியங்கா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.05.2006) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ஸ்கந்தமயம்
சித்தங்கேணி
0777 170 733

(சி/49237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மை போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே10

யாழ். மாவட்ட மெய்வன்மை சங்கத்தினால் நாளைமறுதினமும் மறுநாளும் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தப்படவிருந்த தடகளப்போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளது என சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை விண்ணப்பங்களை அனுப்பிவைக்காத பாடசாலைகள் மற்றும் கழகங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

### மஹோற்சவம்

மாதகல் நுணசை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இன்று புதன் கிழமை மஞ்சத் திருவிழாவும் நாளை வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (135)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே10

யாழ்ப்பாணம் அரும்பொருட் காப்பகத்தின் ஏற்பாட்டில் வல்வை பா.மீனாட்சி சுந்தரத்தின் வரலாற்றில் வல்வெட்டித்துறை என்னும் நூல் வெளியீட்டுவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு சிதம்பராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே10

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாவின் யாழ். நிலையத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வெசாக் போயா ஆன்மீக நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.30 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவடையும்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ.இல:-258-06
தன்மை:- மணவிலக்கு

வழக்காளி
சண்முகநாதன் உமாக்காந்தன்,
திருநகர், கிளிநொச்சி.

எதிராளி
உமாக்காந்தன் றோசிஜெயந்தி
C/o கதிரேசு,
35, கோவாக்தர் அவெனியூ,
ரொறண்டோ MIR 01 H3,
கனடா.

மேற்படி எதிராளிக்கு!

**பகிரங்க அறிவித்தல்**

மேற்படி வழக்கின் எதிராளியானவர் இம் மன்றின் நியாயாதிக்க எல்லைக்கு அப்பால் வசித்து வருவதாலும் வழக்காளியுடன் எவ்விதமான தொடர்புமற்ற வகையில் வாழ்ந்து வருவதாலும் வழக்காளியால் எதிராளிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் எதிராளிக்கு அழைப்பாணை அனுப்பப்படாது மன்றின் கட்டளைக்கமைய இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது. இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 21 நாள்களுக்குள் எதிராளியோ அல்லது அவர் சார்பில் அக்கறையுடைய நபர் களோ, உரித்தானவர்களோ மன்றில் தோன்றி ஆட்சேபனை எதனையும் வெளிப்படுத்தத்தவறின் இவ்வழக்கு குடியியல் நடவடிக்கைச் சட்டத்திற் கமைவாக ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வழக்காளியின் உரிமைக் கோரிக்கைக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மன்றின் கட்டளைப்படி வரைபு
சூ.அச்சுதன்
வழக்காளி சட்டவாளர்.

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி (சி/49239)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6620132 முதல் 6629729 வரை. சீட்டிழுப்பு இல. 234 திகதி 06-05-2006

வெற்றி எண்கள்

0 5 4 8 4 6 23

ஜக்பொட் பரிசு ரூ. 13,436,900/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 13,436,900/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 81 | 5,000/= | 405,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 835 | 500/= | 417,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8294 | 50/= | 414,700/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 82242 | 10/= | 822,420/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/= | 40,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 1,000/= | 86,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 834 | 100/= | 83,400/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8216 | 20/= | 164,320/= |
| | | மொத்தம் ரூ. [illegible] | |
| [illegible] | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,485,940/-

| | |
|---|---|
| [illegible] | 6622380-1-20 |
| கொழும்பு | 6627907-4-79 |
| [illegible] | 6622580-6-[illegible] |
| [illegible] | 6622151-9-40 |
| [illegible] | 6622184-9-19 |
| [illegible] | 6622768-7-84 |
| [illegible] | 6621990-8-22 |
| இரத்தினபுரி | 6626644-4-76 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 13,667,625/-

அபிவிருத்தி லொத்தர் சபை


## நிலைமை....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

யெடுக்க முடியாது: வன்னியை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கின்றனர். இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் நெருக்குவாரங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் இலக்கான மக்கள் அங்கிருந்து தப்பி ஓடி வந்து ஓரளவுக்கு ஆறுதல் அடையக் கூடிய இடமாக வன்னிப் பெருநிலப்பரப்பு இன்று உள்ளது. ஆகையால் அப்பாவி மக்களைத்தான் முழுமையாக படைத்தரப்பினர் இலக்கு வைக்கின்றனர்.

மக்கள் ஓரளவு பாதுகாப்பான பிரதேசங்களுக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றனர். எமது மக்களைப் பாதுகாக்க ஒட்டுமொத்தமாக எமது தேசமும் நாமும் விரைவில் தீர்மானம் எடுக்க வேண்டிய சூழல் நெருங்கிவருகிறது.

தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை நடத்துவது என்ற பழைய நிலைப்பாட்டுக்கு அரசு இப்போது சென்றுள்ளது. இதைச் சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும். இதைத் தடுக்க அரசு மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்பதுதான் தமிழர் தரப்பின் கோரிக்கை.

சர்வதேச சமூகம் இருதரப்பையும் பேச்சுக்கு அழைத்துக் கொண்டிருக்கின்றது. நாங்கள் ஒருபோதும் சமாதானத்தை எதிர்க்கவில்லை. கௌரவமான நிரந்தரமான சமாதானத்திற்காகத்தான் தமிழர்கள் போராடுகின்றனர். தங்களது தாயகத்தில் எதுவித நெருக்குவாரமுமற்று அச்சமும் இல்லாமல் வாழ்வதற்கான அரசியல் உரிமையைப் பெற்றெடுப்பதற்காகத்தான் அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சமாதானத்துக்கு தமிழர் தரப்பு எப்போதுமே விரோதமானதாக இருந்தது இல்லை. தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு ஒட்டுமொத்த இலங்கைத் தீவிலும் ஒரு பயங்கரமான சூழ் நிலையை அரசாங்கம்தான் உருவாக்கியுள்ளது.

பொதுமக்கள் மீது குண்டுவீசி அவர்களை நூற்றுக்கணக்கில் அழித்தபோதும், பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் குண்டு வீசி படுகொலைகளைப் புரிந்தபோதும் எல்லாவற்றையும் விடுதலைப் புலிகளே செய்தார்கள் என்று அரசு முன்னர் கூறிவந்தது. இந்தப் போலித்தனத்தை உலகம் இப்போது நன்கறிந்துள்ளது. இப்போது சர்வதேச சமூகத்தின் பிரச்சனம் இங்கே உள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்புக் குழுவினர் உள்ளனர். ஆகவே கொல்லப்பட்டவர்கள் அப்பாவி மக்களா புலிகளா என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

**பாதுகாப்பிடங்களுக்கு மக்கள் நகரவேண்டும்**

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள எங்கள் மக்களுக்கு எமது அரசியல்துறை போராளிகளின் மூலமாக எங்களது செய்திகளை அனுப்பிக் கொண்டுள்ளோம். பாதுகாப்பான பிரதேசங்களுக்குள் அவர்கள் நகரமுடிந்தால் நகருவதுதான் பொருத்தமானது. தொடரும் வன்முறைகளால் சில பாதுகாப்பு நடைமுறைகளை எமது மக்கள் பேணிக்கொள்ள வேண்டும். எமது பிரதேசங்களுக்குள் இன்றும் பலர் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட ஏற்பாடுகளை செய்து கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

எமது தேசத்திலிருந்து ஆக்கிரமிப்புப் படைகளை ஏதோ ஒருவழியில் விரைவில் அவர்களது தேசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. அதையொட்டி எங்கள் மக்கள் உரிய தீர்மானங்களை எடுப்பார்கள் - என்றார்.


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜிட்சஸ்சனின்
கிங் - கொங் King Kong
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய்
பயமாய் இருக்கிறது
10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினி, ரோஜா, ராதாரவி
நடித்த
காட்சி நேரம் : 10.30, 2.30


## கண்ணீர் அஞ்சலி



கடந்த 02.05.2006 ஆம் திகதி அகாலமரணமடைந்த எமது குருதிக் கொடையாளரும், இரத்ததானத்தை ஊக்குவிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியவரும் உதயன் பத்திரிகை நிறுவன சந்தைப்படுத்தல் முகாமையாளருமான **P.சுரேஸ்** அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அத்துடன் அவருடைய மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

இரத்த வங்கி,
(50091) போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதபிள்ளை செல்லாபரணம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை செல்லாபரணம் 05.05.2006 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும் நாகேஸ்வரியின் (ராசா-ஜேர்மனி) அன்புத் தயாரும், வடிவேலுவின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும், சந்திரமோகன் (கனடா), தாட்சாயினி(கனடா),முரளிதரன்(கனடா) ஆகியோரின் பேர்த்தியும் வைஷத்தர்னியாவின் (கனடா) பூட்டியும் நடராசா, காலஞ்சென்றவர்களான சிவஞானபூரணம், இராசநாயகம் ஆகியோரின் சகோதரியும் முருகையா (புகையிலை வியாபாரி), பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இரத்தினம், வைரமுத்து, சிதம்பரம் ஆகியோரின் மைத்துனியும் பூபதியின் சகலியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியை இன்று (10.05.2006) முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*குமாரலிங்கம் வீதி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (50085)

தகவல்:
மகள் - நாகேஸ்வரி(ராசா)
மருமகன் - வடிவேலு

## திருமதி பழனியாண்டி மனோன்மணி

சங்கானையைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கவிஞர் செல்லையா வீதி, அல்வாய் தெற்கு அல்வாய் என்ற முகவரியில் வசித்தவருமான திருமதி பழனியாண்டி மனோன்மணி அவர்கள் 2006.05.08 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி பழனியாண்டி அவர்களின் பாசமிகு மனைவியும் திருமதி ரஞ்சன் மஞ்சுலாவதி (கனடா), ப.ஜெயதாசன்(பிரான்ஸ்), ர.கௌசலாதேவி (ஆசிரியர், தேவரையாளி இந்துக் கல்லூரி), ப.விமலதாசன்(கட்டடத் திணைக்களம் யாழ்.) ஆகியோரின் அன்புத் தாயும், அ.ரஞ்சன் (கனடா), திருமதி ஜெ.வளர்மதி(பிரான்ஸ்), நா.ரகு(படப்பிடிப்பாளர்), திருமதி வி.கௌசல்யா(ஆசிரியை, யாழ்/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் மாமியாரும், திருமதி நடராசா தவமணி அவர்களின் அன்புச் சகோதரியும், அப்பாப்பிள்ளை நடராசா (ஓய்வுபெற்ற அதிபர்), அவர்களின் அன்பு மைத்துனியும் செல்வி ர.கேமநிஷா(கனடா), செல்வி ர.டெனிஷா(கனடா), ர.அனுசா (கனடா), செல்வன் ஜெ.நிரோன் (பிரான்ஸ்), செல்வன் ஜெ.டெரன் (பிரான்ஸ்), செல்வன். ஜெ.அன்ரூ (பிரான்ஸ்) செல்வன் ர.சுபீட்சணன், செல்வன் வி.நீதலன், செல்வன் வி.தாருளன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், செல்வி ந.அபிராமி (பொறியிலாளர்), செல்வன் ந.மயூரன் (தாதிய மாணவன் யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (2006.05.09) முற்பகல் 10 மணிக்கு கவிஞர் செல்லையா வீதி, அல்வாய் தெற்கு, அல்வாய் என்னும் முகவரியில் நடைபெற்று தகனக்கிரியைகள் அல்வாய் பங்குவேம்படி மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

*கவிஞர் செல்லையா வீதி,*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.* (சி/49240)

தகவல்:
நாகராசா ரகு (மருமகன்),
ரகு கௌசலாதேவி (மகள்)
(ஆசிரியை, யா/தேவரையாளி இ.க)

## நடராஜா ராஜகுலசிங்கம் (சிங்கம்)

**(ரதிவோச் வேக்ஸ் சொப் உரிமையாளர்)**



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ராஜகுலசிங்கம் 06.05.2006 சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சுசீலாவின் அன்புக் கணவரும் ராஜபிரசாத் (கணனிப் பொறியியல் மாணவன், இந்தியா), அன்புத் தந்தையும் தங்கராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவஞானம் - ராஜரதி (லண்டன்), ராஜகுலேந்திரன் பேரின்பநாயகி, பரமானந்தன் ராஜரஜனி (சுவிஸ்), ராஜசேகரன் கலைச்செல்வி(கனடா), ராஜஸ்ரீதரன் விஜயகுமார்(லண்டன்), ராஜசீலன் வசந்தி ஆகியோரின் சகோதரரும் மச்சான், மச்சாள்மார்களும் சிறீதர் சுபத்திரா (இந்தியா), வக்ஸலா சந்திரதயன் ஆகியோரின் மச்சான் மச்சாள்மாரும் த.கனரத்தினத்தின் அன்பு மருமகனும் லவன்,சேந்தன், கோவிஜனனன் ஆகியோரின் மாமனும் நிரோசன் (ஆண்டு 10, யாழ்.இந்து),கரணியா, கரேந்திரா, சகர்னா, வினோதன், வினோஜினி, அனோஜன், மதுரா, விதுஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2006) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 06 இரண்டாம் ஒழுங்கை*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
நடராஜா கனகேஸ்வரி
(தாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் ஒத்துழைப்புடன்தான் 'உதயன்' மீதான தாக்குதல் நடந்தது!

## புலிகள் மீது பழிபோடுவது அபாண்டம் என்கிறார் மாவை

கொழும்பு, மே 10

யாழ்ப்பாண நகரத்தில் மிக அதிகமான இராணுவப் பாதுகாப்பு இருந்த ஒரு வேளையில்தான் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்திற்குள் ஆயுததாரிகள் புகுந்து அட்டகாசம் செய்து இரண்டு உயிர்களைப் பலியெடுத்தனர். ஆனால், இதுற்கான பழியை புலிகள் மீது போடுவதற்கு அரசு முயற்சிகளை எடுத்து வருவது மிகப்பெரிய கேலிக்கூத்து. இவ்வாறான கூத்துக்களை விட்டுவிட்டு அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான சந்தேகநபர்களைக் கைது செய்யவும், 'உதயன்' பத்திரிகைக்கு உரிய பாதுகாப்பை வழங்கவும் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நேற்றுக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துவெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த இருவர் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். யாழ். நகரில் மிக அதிகமான இராணுவம் காவலில் இருந்த சமயம் ஆயுததாரிகள் அலுவலகத்தில் புகுந்த தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிதாரிகள் தாக்குதல் நடத்த வந்தபோதோ தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றபோதோ எங்கும் வழிமறிக்கப்படவில்லை. சோதனையிடப்படவில்லை. அவர்கள் தப்பிச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பில் அப்பாவியான தமிழ்மாணவர்கள் ஏழுபேர் கைது செய்யப்பட்டனர். சிவன் கோவில் வீதியில் அறையொன்றில் தங்கி உயர்கல்வி கற்ற அந்தமாணவர்களை நான் நன்கு அறிவேன். இதனை நாம் ஆராய்ந்தபோது இந்த மாணவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. உண்மைக்கு மாறானவையென அப்பட்டமாகத் தெரிந்தது. இதனால்தான் நீதிமன்றமும் அவர்களை விடுதலை செய்தது.

படைத் தரப்பினரின் அச்சுறுத்தல்களால் இன்று அந்த மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளைக் கைவிட வேண்டிய நிலையில் இருக்கின்றனர். எனவே, அந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டவர்கள் யார் என்பது அரசுக்குத் தெரியும். அவர்களை உடனே கைதுசெய்து 'உதயன்' பத்திரிகைக்குரிய பாதுகாப்பை வழங்கவேண்டும்.

வடக்கு - கிழக்குப்பகுதிகளில் பரவலான வன்முறைகளை அரச படைகளே கட்டவிழ்த்துள்ளன. மாறாகப் புலிகளே கொலையாளிகள்எனவும், தமிழ்மக்களைத் தூண்டி வன்முறைகளில் ஈடுபடுத்தி வருகின்றனர் எனவும் சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கம் பொய்ப் பிரசாரங்களும் செய்கிறது.

இவ்வாறான இரட்டைவேடத்தை அரசாங்கம் முதலில் கைவிடவேண்டும்.

புலிகள் கொலையாளிகள் என்று கூறுவதை நிறுத்தி தங்களால் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை நிறுத்த வேண்டும்.

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற ஜெனீவாப்பேச்சுகளில் இணக்கம்காணப்பட்ட விடயங்களைக்கூட நடைமுறைப்படுத்த முடியாமல் அங்கலாய்க்கின்ற அரசாங்கத்தை நம்பி இரண்டாம் கட்டப் பேச்சுகளுக்கு புலிகள் வருவார்களா?

அரசு நினைத்தால் இரண்டாம் கட்டப் பேச்சுகள் நடைபெறுவதற்கான சூழலை ஏற்படுத்த முடியும். அவ்வாறு எதனையும் செய்யாத அரசு புலிகளுக்கு சேறு பூசும் விதமாக - தமிழ்மக்களை அவமானப்படுத்தும் விதமாக - பொய்ப்பிரசாரத்தினை மேற்கொண்டு வருகிறது - என்றார் மாவை எம்.பி.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் நேற்று நாடாளுமன்றத்தில் சமுகமளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை - இந்தியா இடையே திறந்த வான்வெளிக் கொள்கை!

## மங்களவின் இந்திய விஜயத்தின்போது இணக்கம்

சார்க் நாடுகளுக்கிடையே உள்ள விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தின் அடிப்படையில் திறந்த வான்வெளிக் கொள்கையொன்றை அமுல்படுத்துவது குறித்து இந்தியாவும், இலங்கையும் ஆலோசனைகளை நடத்தியிருக்கின்றன.

இந்தியாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார, துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர நேற்று இந்திய சிவில் விமான சேவைகள் அமைச்சர் ப்ராவுல் பட்டேலைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மங்கள சமரவீர, இரு நாடுகளுக்குமிடையிலான விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும், திறந்த வான்வெளிக் கொள்கைக்கான வாய்ப்புகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டதாகக் கூறினார்.

இது குறித்து மேலும் விரிவான பேச்சுகளை நடத்துவதற்காக இருநாடுகளினதும் அதிகாரிகள் மட்டச் சந்திப்புகள் எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் கொழும்பில் நடைபெறவுள்ளன என்று அமைச்சர் மங்கள சமரவீர மேலும் கூறினார்.

# திருக்கோவில் பாலக்குடாவில் தமிழ் இளைஞர் சூட்டுக்குப் பலி

திருக்கோவில் பாலக்குடாக் கிராமத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

- இவ்வாறு பலியானவர் புண்ணியமூர்த்தி ரூபன் (வயது 19) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திங்களன்று இரவு இவரது வீட்டு க்கு வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் இவரது பெயரைச் சொல்லி அழைத்து, வெளியே வந்த இவரை இக்கிராமத்திலுள்ள ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் சுட்டுப்போட்டுவிட்டு சென்றுள்ளனர் எனத் திருக்கோவில் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இக்கொலை தொடர்பான விசாரணைகளை திருக்கோவில் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர் எனவும், இச்சம்பவத்தையடுத்து இப்பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## கொழும்பில் கைதான பெண்ணுக்கு விளக்கமறியல்

கொழும்பு, மே 10

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினரெனச் சந்தேகிப்பட்டு நேற்றுக் கொழும்பில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவரை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்தன நேற்றுக் குற்றப்புலனாய்வுப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

நேற்றுக் கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்தப் பெண் கிராண்ட்பாஸ் பகுதியில் தங்கியிருந்த அம்பிகா ரெங்கராஜ் என்றும், அமைச்சர் ரோகித்த போகொல்லாகமவின் வீட்டிற்கருகில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டார் எனவும் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அமைச்சரின் நடமாட்டங்கள் குறித்து அறிவதற்காக இந்தப் பெண் அங்கு வந்தாரா என்பது குறித்து மேலும் விசாரணைகள் நடத்த வேண்டியிருப்பதால் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க)

## மரண அறிவித்தல்

### அமரர் நாகராசா சிவபாக்கியம்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகராசா சிவபாக்கியம் நேற்று (09.05.2006) செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் நாகராசாவின் (உரிமையாளர், விநாயகர் அறிவு ஆலை, சங்கானை) அன்பு மனைவியும் கனகசபாபதி (சவூதி அரேபியா), சியாமளா (கனடா), கனகலிங்கம் (கனடா), சசிகலா, சந்திரகலா ஆகியோரின் அன்புத் தாயும் மங்களகௌரி, மகேஸ்வரன் (கனடா), புஷ்பகுமாரி (கனடா), ஜெயபாஸ்கரன், லோகநாதன், குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2006) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விநாயகர் அறிவு ஆலை,*
*பிரதான வீதி,*
*சங்கானை.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நாடாளுமன்றத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்கின் மாவட்டங்கள் தோறும் அண்மைக்காலமாக அரச படைகளும் - ஒட்டுக்குழுக்களும் மேற்கொண்டுவரும் கொலைகள், கடத்தல்கள், தாக்குதல் சம்பவங்களுக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்தனர்.

யாழ். 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் நாடாளுமன்றில் தமிழ் எம்.பிக்களின் குரல் ஓங்கி ஒலித்தது.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது கறுப்புப் பட்டிகளை அணிந்தபடி தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்குள் சென்றனர். முதலில் வாய்மூல வினா - விடையில் சபாநாயகரிடம் அனுமதி பெற்று உரைநிகழ்த்தினார் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா. அவர் தனது உரையின் இறுதியில், வடக்குக் - கிழக்கில் இடம்பெற்றுவரும் அரச பயங்கரவாதத்தை எதிர்த்து தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களாகிய நாம் அமைதியான வழியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறோம் என்று கூறிமுடித்தார்.

அதனைத் தொடர்ந்து கூட்டமைப்பு எம்.பிக்கள் ''அரச பயங்கரவாதத்தை நிறுத்து'' என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகை ஒன்றைப் பிடித்துக்கொண்டு அரசுக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பிக் கொண்டு சபாநாயகருக்கு முன்பாக வந்து நின்றனர்.

அப்படியே கோஷங்களை எழுப்பியவாறு சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்துவதற்காக சபையை விட்டு அவர்கள் வெளியேறினர்.

அப்போது அவர்கள் ஏந்தியிருந்த கொடியில் எழுதப்பட்டிருந்த ''அரச பயங்கரவாதத்தை நிறுத்து'' என்ற வாசகத்தைப் பார்த்த ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார கடுப்பாகிப்போனார்.

''அரச பயங்கரவாதத்தை நிறுத்து'' என்ற வாசகத்தை எழுதியிருக்கும் நீங்கள் ''புலிப் பயங்கரவாதத்தை நிறுத்து'' என்று ஏன் எழுதத் தவறிவிட்டீர்கள்? என ஹேமகுமார தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் கேள்வி எழுப்பி அவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதனை எட்ட நின்று பார்த்துக்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 'சரியான கேள்வி கேட்டீர்' எனக் கூறி ஹேமகுமாரவைத் தட்டிக்கொடுத்தார்.

ஹேமகுமார முதலில் ரவிராஜ், சிவாஜிலிங்கம் மற்றும் கனகசபை ஆகியோருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். பிறகு ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்களும் அவரைச் சூழ்ந்து தர்க்கித்தனர்.

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறும் நிலை தென்பட்டது. அந்த நேரத்தில் ஏனைய ஐ.தே.க. உறுப்பினர்கள் ஓடிவந்து ஹேமகுமாரவை அவரது ஆசனத்திற்கு இழுத்து வந்துவிட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திட்டமிட்டபடியே சபைக்கு வெளியே சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் போதெல்லாம் ஆளும் தரப்பினர் அவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவது வழமை. ஆனால், நேற்று எதிர்க்கட்சி உறுப்பினரான ஹேமகுமார மாத்திரம் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட ஆளும் தரப்பினர் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பணிப்புறக்கணிப்புப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடந்தன. இதேவேளை, நேற்றுமுன்தினம் மூடப்பட்ட ஏ-9 வீதி நேற்று முழு அளவில் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது.(க)

## புன்னைக்குடாவில் சடலம் மீட்பு!

ஏறாவூர், மே 10

ஏறாவூர் - புன்னைக்குடா வீதியில் உள்ள பற்றைக்காட்டுப் பிரதேசத்தில் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை ஏறாவூர்ப் பொலீஸார் நேற்று காலை மீட்டுள்ளனர்.

தம்பிமுத்து - சிவலிங்கம் (வயது - 40) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் சடலமொன்று காணப்படுகின்றது எனப் பொது மக்களிடம் இருந்து கிடைத்த தகவலொன்றை அடுத்து அங்கு சென்ற பொலீஸார் சடலத்தை மீட்டு ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

புன்னைக்குடா கடற்கரையில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள பற்றைக் காட்டில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே இவர் அடித்தும், கத்தியால் குத்தியும் கொலை செய்யப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என ஏறாவூர்ப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும், சம்பவம் தொடர்பான மேலதிக புலன் விசாரணைகளையும் தாம் மேற்கொண்டுவருகின்றனர் என ஏறாவூர் பொலீஸார் கூறினர். (க)

## பிரபாகரனிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரனின் செய்தியைத் தான் எடுத்துச் செல்கிறார் என்று அவர் தெரிவித்துள்ளார். அது ஊடகங்களுக்குச் சொல்லக்கூடியதல்ல என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஜப்பானியப் பிரதிநிதிகளால் அரசிடம் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எந்தச் செய்தியும் எடுத்துவரப்படவில்லை என்றும் -

அரசுக்கு செய்தி எதனையும் வழங்கும் மனோநிலையில் விடுதலைப் புலிகள் இல்லை என்றும் -

சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார். (க)

## பனிக்கன்குளத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாளர்களான வீரக்கொடி சோமராசா (வயது 60-திருவையாறு), தொப்பிலான் பெரியசாமி (வயது 58-கிளிநொச்சி) ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டன.

இருவரதும் கைகள் கட்டப்பட்டிருந்தன. சூட்டுக்காயங்களும் காணப்பட்டன.

சடலங்களுக்கு அருகில் இருந்து நான்கு வெற்றுத்தோட்டாக்களை தமிழீழ காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

சடலங்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டன.

கண்காணிப்புக்குழுவின் கிளிநொச்சி அலுவலக அதிகாரி மட்டி வைனியோன்பா வைத்தியசாலையில் சடலங்களைப் பார்வையிட்டார்.

இந்தக் கொலைகள் ஆழ ஊடுருவித்தாக்கும் அணியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்

அண்மைய காலத்தில் இத்தகைய மூன்று சம்பவங்கள் பிரஸ்தாப காட்டுப் பகுதியில் நடந்துள்ளன என்றும் காவல் துறையின் மாங்குளம், துணுக்காய்ப்பிரிவு அதிகாரி விஜயகுமார் தெரிவித்தார்.

மாங்குளத்துக்கு வடமேற்கில் ஏ-9 வீதிக்கு மேற்கே 5 கிலோமீற்றர் தூரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவன[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org